இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 03-07-2025

# மகத்தான மராட்டியம்

வலுவான போராட்டங்களின் மூலம் இந்தித் திணிப்பை விரட்டி இருக்கிறது மராட்டியம்!

**மகாராஷ்டிரத்தில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை மூன்றாவது மொழியாக இந்தியை கற்பிக்கும் வகையில், மும்மொழிக் கொள்கையைக் கொண்டு வரத் திட்டமிட்டது ஆளும் பா.ஜ.க. கூட்டணி அரசு. இதற்கு அந்த மாநிலத்தில் கடுமையான எதிர்ப்பு கிளம்பியது. என்னென்னவோ சொல்லி சமாளிக்கப் பார்த்தார்கள். ஆனால் யாரும் பின்வாங்கவில்லை. அதனால் அந்த உத்தரவை திரும்பப் பெற்றுள்ளது ஆளும் பா.ஜ.க. கூட்டணி அரசு.**

மகாராஷ்டிராவில் பா.ஜ.க. தலைமையிலான கூட்டணி அரசு ஆட்சியில் இருக்கிறது. இந்தக் கூட்டணிக்கு ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான சிவசேனாவும், அஜீத் பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸும் ஆதரவு தெரிவித்துள்ளன. எனவே கூட்டணி ஆட்சியை நடத்தி வருகிறது பா.ஜ.க. வழக்கம் போல் தனது இந்தித் திணிப்பை இந்த மாநிலத்திலும் செய்யப் பார்த்தது பா.ஜ.க. அது அந்த ஆட்சிக்கே பெருத்த பின்னடைவாக முடிந்து விட்டது.

இந்தியைத் திணிக்கும் ஒரே நோக்கத்துக்காகவே ஒன்றிய அரசு தேசியக் கல்விக் கொள்கையைக் கொண்டு வருகிறது. அதனால் தான் தமிழ்நாடு அதனைக் கடுமையாக எதிர்த்து வருகிறது.

ஒன்றிய அரசின் தேசிய கல்விக் கொள்கைக்கு ஏற்ப மகாராஷ்டிரா மாநிலப் பள்ளிக் கல்வி பாடத்திட்ட கொள்கை கடந்த ஆண்டு வகுக்கப் பட்டது.

அதன்படி, மாநிலத்தில் மராத்தி மற்றும் ஆங்கில வழிக் கல்வி பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை இந்தி மூன்றாவது கட்டாய மொழிப் பாடமாகக் கற்பிக்கப்படும் என்று கடந்த ஏப்ரல் மாதம் அரசாணை வெளியிடப்பட்டது. இந்த அரசாணை வெளியானதும் கடுமையான எதிர்ப்பு கிளம்பியது. உடனடியாக விருப்பப் பாடம் என்ற வார்த்தையைப் போட்டு புதிய அரசாணையை அம்மாநில அரசு வெளியிட்டது.

கடந்த ஜூன் மாதம் 17ஆம் தேதி வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட அரசாணையில், '1 முதல் 5 ஆம் வகுப்புவரை இந்தி மூன்றாவது மொழியாகக் கற்பிக்கப்படும். குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்த 20 விழுக்காடு மாணவர்கள் விரும்பினால், இந்தியைத் தவிர வேறு ஒரு மொழிகளில் ஏதேனும் ஒன்றைக் கற்கலாம்' என்று குறிப்பிடப்பட்டது. '20 விழுக்காடு மாணவர்கள் விரும்பினால்' என்பது, நடைமுறைக்கு சாத்தியப்படாத வழி முறை ஆகும். எனவே மராத்தி அமைப்பினர் இந்த அரசாணையையும் கடுமையாக எதிர்த்தார்கள்.

மராத்தி மொழியின் அடையாளத்தை அழிக்கும் இந்த முயற்சியை மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள முக்கியக் கட்சிகள் கடுமையாக எதிர்த்தது.

சரத்பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ், உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவசேனா ஆகியவை கடும் எதிர்ப்பை தெரிவித்தது. இதனை பா.ஜ.க. கூட்டணி அரசால் சமாளிக்க முடியவில்லை. மகாராஷ்டிரா மாநில மொழி ஆலோசனைக் குழுவும், மும்மொழித் திணிப்பு அரசாணையை திரும்பப் பெற கோரிக்கை வைத்தது. இதுவும் பா.ஜ.க. அரசுக்கு பெரும் நெருக்கடியைக் கொடுத்தது.

தெற்கு மும்பையில் நடைபெற்ற போராட்டத்தில் உத்தவ் தாக்கரேயுடன் காங்கிரஸ் கட்சியினரும் கலந்து கொண்டவர். உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவசேனா ராஜ் தாக்கரேவின் மகாராஷ்டிர நவநிர்மாண் சேனை ஆகிய கட்சிகள் சார்பில் ஜூலை 5ஆம் தேதி கூட்டுப் போராட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. மகாராஷ்டிரா சட்டசபையும் கூட இருக்கிறது. எனவே எதிர்ப்பை சமாளிக்க முடியாது என்று நினைத்தது பா.ஜ.க. கூட்டணி அரசு.

இதைத் தொடர்ந்து கடந்த 29 ஆம் தேதியன்று செய்தியாளர்களைச் சந்தித்த மகாராஷ்டிரா மாநில முதலமைச்சர் தேவேந்திர பட்னவீஸ், " மும்மொழிக் கொள்கை தொடர்பாக ஏப்ரல், ஜூன் ஆகிய மாதங்களில் போடப்பட்ட இரண்டு அரசாணைகளையும் திரும்பப் பெறுகிறோம்" என்று அறிவித்தார். **மராத்திய மொழி மக்களின் போராட்டத்துக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாக இது அமைந்து விட்டது. 'இது மராத்தியர்களின் ஒற்றுமைக்கு கிடைத்த வெற்றி' என்று சொல்லி இருக்கிறார் உத்தவ் தாக்கரே.**

'எந்த மொழிக்கும் நாங்கள் எதிரானவர்கள் அல்ல, ஆனால் எந்த மொழியையும் திணித்தால் எதிர்ப்போம்' என்று சொல்லி இருக்கிறார் உத்தவ் தாக்கரே. இதே நிலைப்பாட்டையே ராஜ் தாக்கரேவும் எடுத்தார். 20 ஆண்டுகளுக்கு முன்னால் இருவரும் அரசியல் ரீதியாக பிரிந்தவர்கள். 2005 ஆம் ஆண்டு சிவசேனாவில் இருந்து வெளியேறி தனிக் கட்சி தொடங்கியவர் ராஜ் தாக்கரே. இருவருக்கும் எந்த தொடர்பும் இல்லை. ஆனால் இந்தித் திணிப்பு இப்போது உத்தவ் தாக்கரேவையும் ராஜ் தாக்கரேவையும் ஒன்றாக இணைத்து விட்டது. பா.ஜ.க.வுக்கு இது அரசியல் நெருக்கடியாகவும் அமைந்துவிட்டது. "இது மராத்தியர்களின் ஒற்றுமைக்குக் கிடைத்த வெற்றி. தாக்கரே சகோதரர்கள் ஒன்று சேர்ந்து விடுவார்கள் என்று பயந்து இந்தித் திணிப்பை அரசு கைவிட்டு விட்டது" என்று உத்தவ் கட்சி எம்.பி.யான சஞ்சய் ராவத் சொல்லி இருக்கிறார்.

**"இந்திக்கு எதிரான பேரணி நடந்திருந்தால் அது மிகப்பெரியதாக இருந்திருக்கும்" என்று ராஜ் தாக்கரேவும் சொல்லி இருக்கிறார். "இந்தியைத் திணிக்க ஏன் இவ்வளவு பிடிவாதமாக இருக்கிறீர்கள். இந்த அழுத்தம் எங்கிருந்து வருகிறது என்பது மர்மமாக இருக்கிறது. இந்தியை எப்போது திணித்தாலும் எதிர்ப்போம்" என்றும் சொல்லி இருக்கிறார் ராஜ் தாக்கரே.**

**உத்தவ் தாக்கரே, ராஜ் தாக்கரே இணைந்து அறிவித்த பேரணிக்கு தார்மீக ஆதரவைச் சொல்லி இருந்தார் மகாராஷ்டிரா மாநில மூத்த தலைவரும் தேசியவாத காங்கிரஸ் தலைவருமான சரத் பவார். உத்தவ் தாக்கரே நடத்திய இந்தித் திணிப்பு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் காங்கிரஸ் கட்சியும் பங்கெடுத்தது. இந்த வகையில் இந்தித் திணிப்புக்கு எதிராகப் போராடி மகத்தான மராட்டியமாகக் காட்டிவிட்டது.**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.7.2025) சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற "நான் முதல்வன்" மூன்றாண்டு வெற்றி விழா மற்றும் "வெற்றி நிச்சயம்" திட்ட தொடக்க விழாவில், மாணவர்களின் புதிய கண்டுபிடிப்புகள், கண்டறிதல்கள் மற்றும் புதிய தொழில்நுட்ப உருவாக்கங்களைப் பிரதிபலிக்கும் "நான் முதல்வன்" நிரல் திருவிழா வெற்றியாளர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், உயர்கல்வித் துறை செயலாளர் முனைவர் பொ.சங்கர், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி, இந்திய தொழில் கூட்டமைப்பின் தமிழ்நாடு யூனிட் தலைவர் உன்னி கிருஷ்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## கூட்டுறவுச் சங்கங்களுக்கு குறைக்கப்பட்டுள்ள

# நபார்டு வங்கியின் நிதியினை மீண்டும் உயர்த்தி வழங்கிடவேண்டும்!

### ஒன்றிய உள்துறை அமைச்சர் தலைமையில் நடைபெற்ற தேசிய அளவிலான கூட்டத்திற்குப் பின் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேட்டி!

புதுடெல்லி, ஜூலை 3-

கூட்டுறவுச் சங்கங்களுக்கு குறைக்கப்பட்டுள்ள நபார்டு வங்கியின் பயிர்க் கடன் நிதியினை மீண்டும் உயர்த்தி வழங்கிட வேண்டும் என்று ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையில் நடைபெற்ற தேசிய அளவிலான கூட்டத்திற்குப் பின் அளித்த பேட்டியில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வலியுறுத்தினார்.

ஒன்றிய உள்துறை அமைச்சரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான அமிர்ஷா தலைமையில் 30.6.2025 அன்று புதுடெல்லி பாரத் மண்டபத்தில், நடைபெற்ற தேசிய அளவிலான கூட்டத்தில் (நான்) கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் கலந்து கொண்டேன். உடன் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் க.நந்தக் குமார் கலந்து கொண்டார்.

அந்தக் கூட்டம் காலை 10:30 மணிக்கு தொடங்கி தொடர்ந்து 5.30 மணி வரை நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் தமிழ்நாட்டின் சார்பில் கூட்டுறவுத் துறை அமைச்சர் ஆகிய நானும் பதிவாளர் அவர்களும் கலந்து கொண்டோம்.

அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட மாநிலங்களில் ஐந்து மாநிலங்களுடைய பதிவாளர்களும், செயலாளர்களும் அந்த மாநிலத்தில் நடத்தப்படுகின்ற கூட்டுறவு துறை திட்டங்களை விளக்குவதற்காக தேர்வு செய்திருந்தார்கள்.

அந்த 5 மாநிலங்களில் நம்முடைய தமிழ்நாட்டின் சார்பில் கூட்டுறவு துறையின் செயல்பாடுகளை பதிவாளர் அவர்கள் அந்த அரங்கத்தில் விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள்.

**கூட்டுறவு ஒன்றிய பிறப்பிடம் அதன் தாய்மடி என்றால் தமிழ்நாடு!**

அதைத் தொடர்ந்து அமைச்சர் அவர்கள் அனைத்து மாநில அமைச்சர்களும் பேசுகின்ற வாய்ப்பினை தந்தார்கள். அவர்களின் மாநிலத்தில் கூட்டுறவு துறைகளின் செயல்பாடுகள் எப்படி இருக்கிறது, என்ன தேவை, என்பதை எல்லாம் கூட்டத்தில் வலியுறுத்தி சொன்னார்கள். அதன் அடிப்படையில் அமைச்சர் என்ற முறையில் தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையின் செயல்பாடுகள் எந்த அளவுக்கு சிறப்பாக இருக்கிறது என்பதையும், குறிப்பாக கூட்டுறவு ஒன்றிய பிறப்பிடம் அதன் தாய் மடி என்றால் தமிழ்நாடு தான் என்பதையும் அழுத்தமாக பதிவு செய்தோம். காரணம் 1940இல் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத நேரத்தில் முதன் முதலாக கூட்டுறவு சங்கங்கள் தொடங்கப்பட்டது, சென்னைக்கு அருகில் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள திருவூர் தான். ஆகவே அத்தகைய பெருமைக்குரிய தமிழ்நாட்டின் சார்பில் முதலமைச்சர் அவர்களுடைய சார்பில் நான் கலந்து கொண்டேன் என்பதையும் தெளிவுபடுத்துகிறேன். ஆக பல்வேறு செயல்பாடுகள் நம்முடைய பதிவாளர் அவர்கள் குறிப்பிட்டு சொன்னதை போல நானும் சில விளக்கங்களை அக்கூட்டத்தில் சொன்னேன்.

**குறைக்கப்பட்டுள்ள பயிர்க் கடன்!**

கடந்த கால 2023, 24 வரையில் உள்ள NABARD வங்கியின் சார்பில் பயிர் கடன் கொடுப்பதற்கு முக்கியமாக பல்வேறு தரப்புகளில் இருந்து வந்தால் தான் கொடுக்க முடியும். ஆகவே அந்த கடந்த 2023 - 2024 நிதியாண்டில் NABARD வங்கி 4,290 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டது. அப்படி கொடுக்கப்பட்ட அந்த நிதியை அடுத்த நிதியாண்டில் 24 NABARD வங்கி குறைத்து



விட்டது. இந்த ஆண்டும் 2825 கோடியாக NABARD வங்கி குறைத்து விட்டது. இந்த ஆண்டும் 2825 கோடி தான் நியமித்து உள்ளார்கள்.

ஆகவே குறைக்கப்பட்ட நிதிகளை மீண்டும் கூட்டி வழங்குவதற்கு NABARD வங்கியை வலியுறுத்த வேண்டும் என்று அக்கூட்டத்தில் நாங்கள் எங்களுடைய கருத்துக்களை பதிவு செய்திருக்கிறோம். காரணம் பயிர்க் கடனை பொறுத்தவரை தளபதி அண்ணன் பொறுப்பேற்ற பின் அரசு கடந்த காலங்களில் 2011 காலகட்டங்களில் அ.தி.மு.க. அரசு தமிழ்நாட்டில் இருந்த நேரத்தில் அவர்கள் ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக பத்தாண்டுகளில் 6000 கோடி வீதம் விவசாயிகளுக்கான பயிர்க் கடனாக வழங்கினார்கள். ஆனால் நம் முதலமைச்சர் பொறுப்பேற்ற முதல் ஆண்டிலேயே அதை 10,200 கோடி ரூபாய் என்கின்ற அளவிற்கு உயர்த்தி வழங்கி சாதனை படைத்திருந்தார். அடுத்த ஆண்டும் 12,200க்கும் மேற்பட்ட கோடியே பயிர்க் கடனாக வழங்கி, சென்ற ஆண்டு 15,000 கோடி வரைக்கும் வழங்கியுள்ளார். இந்த ஆண்டு 17,000 கோடி ரூபாய் பயிர்க் கடன் வழங்க முதலமைச்சர் அவர் நிர்ணயித்து உள்ளார்கள். பிரதான தொழிலான விவசாய தொழிலில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளுக்கு உதவ வேண்டும் என்ற அடிப்படையில் முதலமைச்சர் கடன் தொகையை ஆண்டு தோறும் அதிகரிக்க செய்து கொண்டிருக்கிறார். அதே நேரத்தில் ஒன்றிய அரசின் சார்பில் NABARD வங்கியின் மூலம் வரக்கூடிய நிதியை குறைத்து இருப்பது பொருத்தமாக இருக்காது. ஆகவே அதை மீண்டும் கிடங்குகளில் சேமித்து வைத்து பிறகு நல்ல விலை வரும் வேளையில் விற்பனை செய்வது வழக்கம், அரசின் சார்பில் கொள்முதல் செய்யப்படுகின்ற அந்த பொருள்களையும் சேமித்து வைப்பதற்கு கிடங்குகள் குளிர்சாதன கிடங்குகள் தேவை.

**கூட்டுறவுத் துறைக்கு 5 விருதுகள்!**

ஆகவே கடந்த காலங்களில் அது போன்ற சங்கங்கள் கட்டப்படுகின்ற குத்தகைகளுக்கு 33 சதவீதம் வரை மானியமாக வழங்கியிருந்தார். 33 சதவீதம் வழங்கி வந்த மாநிலத்தை முழுமையாக நிறுத்தி விட்டார்கள். அப்பொழுது நான்கு சதவீதம் அந்த வட்டி வசூலிக்கப்பட்டது. இப்பொழுது அந்த வட்டி 3% சதவீதம் உள்ளதாக கொடுத்த தொகைகள் நமக்கு குறைந்துவிட்டது. கூட்டுறவு சங்கங்களை பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் சில பழமையானது மட்டுமல்ல சிறப்பாக செயல்படுகின்ற மாநிலம் என்பதையும் ஒன்றிய அரசு உணர்ந்து இருக்கிறது என்ற அடிப்படையில் தான் கடந்த 5,6 மாதங்களுக்கு முன்பு டெல்லியில் வழங்கப்பட்ட நிகழ்ச்சியில் தமிழ்நாட்டு கூட்டுறவு வங்கியின் செயல்பாடுகள் ஐந்து விருதுகள் வழங்கப்பட்டது என்பதையும், அப்படி கூட்டுறவுத்துறை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி சிறப்பாக செயல்பட்டு வருகிறது என்பதையும் 25 வகையான கடன்கள் எந்த மாநிலத்திலும் இந்த அளவிலான கடன்கள் கொடுத்ததில்லை.

**25 வகையான கடன்கள் வழங்கல்!**

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பயிர் கடன் மற்றும் நகை கடனோடு இல்லாமல் நலிந்த பிரிவினருக்கு அவர்களின் பொருளாதாரத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காக மகளிர் சுய உதவி குழுக்களுக்கு கடன்கள், தாய்மார்கள், சகோதரிகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், மாற்றுத்திறனாளிகள், என 5% சதவீத வட்டி தொகைக்கு வழங்கப்படுகிறது.

பெட்டிக்கடை, சாலையோர வியாபாரி, நலிந்த பிரிவினர்களுடைய கீழ்த் தட்ட உயர்த்துகின்ற 25 வகையான கடன்கள் சங்கங்களின் மூலமாக வழங்கப்படுகிறது வேறு எந்த மாநிலத்திலும் இப்படி வழங்கவில்லை. தமிழ்நாட்டின் கூட்டுறவு சங்கங்களின் செயல்பாட்டை சொல்ல வேண்டும் என்றால் நம்முடைய கூட்டுறவு சங்கங்களின் ஐந்திற்கும் மேற்பட்ட சேவைகள் ஏறத்தாழ 2000 க்கு மேற்பட்ட சங்கங்கள் செய்கின்றன. எல்லா வகையிலும் இந்த அரசு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலின்படி ஏழை எளியவர் களுக்கு பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு விவசாயி களின் உச்ச தோழனாக இருக்கக்கூடிய கூட்டுறவு சங்கங்களுக்கு இன்னும் கூடுதலாக விவசாயிகள் கடந்த காலங்களில் நிர்ணயிக்கப்பட்ட தொகையை விடவும், கூலிகள் உயர்வும் உயர்ந்திருக்கிறது.

ஆகவே அவர்களுக்கு வழங்க வேண்டிய பயிர்க் கடனுக்கான தொகையினையும் உயர்த்தி வழங்க வேண்டும் என வலியுறுத்தி சொல்லி இருக்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேட்டியளித்தார்.

பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டத்தில் மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமினை அமைச்சர் சா.சி.சிவசங்கர், தொல்.திருமாவளவன் எம்.பி., ஆகியோர் கலந்து கொண்டு, தொடங்கி வைத்தனர். இதில் பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.அருண்ராஜ், அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ம.பிரபாகரன் (பெரம்பலூர்), கு.சின்னப்பா (அரியலூர்), க.சொ.க.கண்ணன் (ஜெயங்கொண்டம்) ஆகியோர் உள்ளனர்.

